C.C.3/12

7.5.19

ம.சா.1 மனுவில் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு 1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

23.12.1969 ம் தேதி தொடங்கப்பட்ட தமிழ்நாடு சமூக சேவா சங்கம் தங்கராஜ் என்பவரால் தொடங்கப்பட்ட காலத்திலிருந்தே 1ம் எதிரி மேற்படி சங்கத்தில் செயலாளராக இருந்து வருகிறார் என்றால் 1998ம் ஆண்டு வரை செயலாளராக பணிபுரிந்தார். எனக்கு சங்க விதிகள் தெரியும் என்றால் சரிவர தெரியும். சங்கத்தின் நோக்கமானது சமூக பணிகளில் ஈடுபடுவது பெண்கள், குழந்தைகள் முன்னேற்றத்திற்கு பாடுபடுவது மற்றும் அனைத்து சமூக தொண்டு செய்வது. பதிவு செய்யப்பட்ட சங்கம் என்றால் சரிதான். சங்கத்திற்கு 2 அலுவலகம் உள்ளது. நிர்வாக அலுவலகம் மதுரையிலும், பதிவு அலுவலகம் கள்ளிகுடியிலும் இயங்கி வருகிறது. சங்கத்திற்கு கிளை அலுவலகம் இல்லை. மதுரை ரயிலா நகரில் இயங்கி வரும் நிர்வாக அலுவலகம் 1999ம் ஆண்டு நடைபெற்ற பொதுகுழுவில் அங்கீகாரம் பெற்று இயங்கி வருகிறது. நிர்வாக அலுவலகத்திற்கு பொதுகுழுவில் தீர்மானம் நிறைவேற்றி மாவட்ட பதிவாளரிடம் அனுமதி பெறப்பட்டுள்ளதா என்றால் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி அனுமதியை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு சரியாக நினைவில் இல்லை. மேற்படி அனுமதி கடிதத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றும் வழக்கிற்காக தாக்கல் செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தமிழ்நாடு சமூக சேவா சங்கம் கள்ளிக்குடியில் மட்டுமே அலுவலகம் உள்ளது என்றும் நான் சட்டத்திற்கு விரோதமாக மதுரையில் தமிழ்நாடு சமூக சேவா சங்கம் நிர்வாக அலுவலகம் உள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சங்கங்கள் பதிவு சட்டத்தின்படி சமூக சேவா சங்கம் செயல்படவேண்டும் என்றால் சரிதான். கல்லுபட்டியை சேர்ந்த கோபால் என்பவர் தமிழ்நாடு சமூக சேவா சங்கத்திற்கு என்னை அறிமுகம் செய்தார். முதலில் 48 பேர் பொதுகுழு உறுப்பினர்கள் இருந்தனர். மொத்தம் 48. அதில் 7 பேர் நிர்வாக குழு உறுப்பினர்கள். சங்க விதிகளின் படி சங்கத்தில் தொடர்ந்து இருப்பவர்கள் ஒவ்வொரு ஆண்டும் உறுப்பினர் சந்தா செலுத்தவேண்டும் என்றால் சரிதான். உறுப்பினர் சந்தா வருடத்திற்கு ஆண்டு சந்தா 100 ரூபாய் ஆகும். நான் 1998 ஆண்டு முதல் தற்போது வரை ஆண்டு சந்தா செலுத்தி வருகிறேன். இந்த வழக்கில் ஆண்டு சந்தா ரசீது நகல் எதுவும் நான் தாக்கல்

செய்யவில்லை. நான் 1998 ஆண்டு மட்டும் உறுப்பினர் ஆண்டு சந்தா செலுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. 1999ம் ஆண்டு என்னை அடிப்படை உறுப்பினரிலிருந்தே நீக்கி விட்டனர் என்றும் அதன் பிறகு நான் உறுப்பினர் ஆண்டு சந்தா செலுத்தவில்லையென்றால் சரியல்ல. தமிழ்நாடு சமூக சேவா சங்கத்தில் ஆயுள் கால உறுப்பினர்கள் உள்ளனரா என்றால் அதுமாதிரியான நடைமுறை ஆரம்ப காலத்தில் இருந்ததாக சொன்னார்கள். சங்க விதியின் படி ஒவ்வொரு ஆண்டும் அனைத்து உறுப்பினர்களையும் அழைத்து பொதுகுழு கூட்டம் நடந்தப்படும் என்றால் சரிதான். தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் மற்றும் நிர்வாக குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்றும் அவர்களின் பதவி காலம் 3 ஆண்டுகள் என்றால் சரிதான். பதவியிலுள்ள நபர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க இயலும் என்றால் சரிதான். தேவை ஏற்படும் பட்சத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். 6.6.1999ம் ஆண்டு தான் சங்க தலைவர் திரு.ராமசாமி தலையில் மெர்சி அன்னபூரணி மற்றும் பொதுகுழு உறுப்பினர்களை கொண்டு பொதுகுழு நடைபெற்றது. அந்த ஆண்டில் நடைபெற்ற பொதுகுழுவில் என்னை பதவி நீக்கம் செய்தது சம்பந்தமாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்றால் சரியல்ல. 1998-1999 ஆண்டுகளில் நான் சங்கத்திற்குரிய பணத்தை முறைகேடு செய்தாக நடவடிக்கை எடுத்ததால் தனிபுகார் சிசி.26∴.2001 இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் முறைகேடு எதுவும் செய்யவில்லை. சிசி.26∴.2001 வழக்கில் உள்ள மற்ற எதிரிகள் என் உறவினர்கள் என்றால் இல்லை. ஒருவர் எனது கணவர். மற்றொருவர் சமூக சேவா சங்கத்தில் பணிபுரிந்தவர். நான் விருதுநகரில் பிளாசம் என்ற பெயரில் தொண்டு நிறுவனம் நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். 1993ம் ஆண்டு மேற்படி சங்கம் தொடங்கப்பட்டது. நான் தமிழ்நாடு சமூக சேவா சங்கத்தில் உறுப்பினராக சேரும் போது விருதுநகரில் நடத்தி வந்த பிளாசம் தொண்டு நிறுவனம் பற்றி சொல்லவில்லையென்றால் சரியல்ல. என்மீது இதே நீதிமன்றத்தில் சிசி.256∴.03 வழக்கு நடைபெற்றது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நான் முறைகேடு செய்ததாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அதாவது தமிழ்நாடு சமூக சேவா சங்கத்திலிருந்து விலக்கப்பட்ட பின்பு அதன் பெயரை பயன்படுத்தி ஆன்லைனில் வெளிநாடுகளுக்கு விளம்பரம் செய்து நான் நடத்தி வந்த பிளாசம் அலுவலக முகவரியை தமிழ்நாடு சமூக சேவா சங்கம் இயங்கி வருவதாக காண்பித்து நிதி உதவி பெற்று மோசடி செய்தேன் என்றுதான் வழக்கு என்றால் சரியல்ல. உறுப்பினர் சந்தா செலுத்தி வருகிறேன்

என்பதை காண்பிப்பதற்கு தயாராக உள்ளேனா என்றால் அது தேவையில்லை. 1999ம் ஆண்டு பிறகே தமிழ்நாடு சேவா சமூக சங்கத்திலிருந்து என்னை அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கிய பிறகு நான் எந்த சங்க கூட்டங்களிலும் பங்கேற்கவில்லையென்றால் சரியல்ல. 1999 ஆண்டுக்கு பிறகே எவ்வித சந்தா தொகையும் கட்டவில்லையென்றால் சரியல்ல. சங்க உறுப்பினர் ஆண்டுக்குரிய சந்தா தொகையை செலுத்தவில்லையென்றால் சங்கத்தில் உறுப்பினராக செயல்பட முடியாது என்றால் சரியல்ல. பொதுகுழு தீர்மானிக்கலாம். ஒவ்வொரு 3 ஆண்டுகளுக்கும் முடிவின்போது தலைவர், செயலாளர் பொருளார் மற்றும் நிர்வாக குழு உறுப்பினர்கள் பொதுகுழுவில் தேர்ந்தேடுக்கப்பட வேண்டும் என்றால் சரிதான். புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் நிர்வாக குழு உறுப்பினர்கள் பற்றிய விவரத்தை மாவட்ட பதிவாளரிடம் அனுப்பி ஒப்புதல் பெறவேண்டும் என்றால் சரியல்ல சமர்ப்பிக்கவேண்டும். பொதுகுழுவில் எடுக்கப்படும் தீர்மானங்கள் அனைத்தும் மாவட்ட பதிவாளருக்கு படிவம் 7ல் அனுப்பபட்டு ஒப்புதல் பெறவேண்டும் என்றால் சரியல்ல. சமர்ப்பிக்கவேண்டும். படிவம் 7ல் அனுப்பப்படும் தீர்மானங்களை மாவட்ட பதிவாளர் திருப்பி அனுப்ப உரிமையுண்டு என்றால் சரிதான். 3.7.06 ந.க.எண்.2196/இ1/06ல் மாவட்ட பதிவாளர் எனக்கு கடிதம் அனுப்பினார் என்றால் சரியல்ல. 3.7.06ம் தேதியிட்ட கடிதம் எனக்கு அனுப்பப்படவில்லை. அதுபற்றிய விவரம் எனக்கு தெரியாது. 3.7.06ம் தேதியிட்ட உத்தரவினை ஆட்சேபித்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் டபியுபி நம்பர்.6541∴06ல் மனு தாக்கல் செய்தேன் என்றால் எனக்கு சரியாக நினைவில்லை. மேற்படி ரிட் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவு ஏற்பட்டுள்ளது என்றால் எனக்கு சரியான நினைவில்லை. அது சம்பந்தமாக உரிமையியல் நீதிமன்றத்தில் பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு உத்தரவு ஏற்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என்னை தமிழ்நாடு சமூக சேவா சங்கத்திலிருந்து நீக்கியதற்கு பின்னர் உறுப்பினராக தொடர்வதற்கு உரிமை கேட்டு எந்தவொரு நீதிமன்றத்திலும் வழக்கு தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். 1,2 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.